10 பாடம்

# தேவனுக்கே முதலிடம்

***வேறு புதிய ஊருக்கு மாற்றலாகிக் குடும்பத்தோடு நீ சென்றதுண்டா? அல்லது, புதிய பள்ளியில் சேர்ந்து படித்ததுண்டா? ஆரம்பத்தில் உனக்கு எப்படியிருந்தது? இதுவரையிலும் கூடாரங்களில் குடியிருந்த இஸ்ரவேலர் இப்போது தேவன் தங்களுக்கு வாக்குப்பண்ணிய கானானுக்குள் நுழைய இருந்தனர். மோசே இஸ்ரவேலர் யாவருமே ஆர்வமாயிருந்தனர்.***

ஒரு காலைப்பொழுதில் மோசே, தேவனது அருமையான வழிநடத்துதல்களை ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்தார்.

இஸ்ரவேலர் மக்களை வழிநடத்தும்படி மோசேயை தேவன் 40 ஆண்டுகளாகப் பயன்படுத்தி வந்திருந்தார். எத்தனையோ ஆபத்துக்களைக் கடந்து வரவேண்டியதிருந்தது. இஸ்ரவேல் மக்கள் மத்தியில் மோசேயின்மூலம் தேவன் இன்னும் அநேக அற்புதங்களை நடத்தி வந்திருந்திருந்தார்.

செங்கடல் இரண்டாகப் பிரிந்தது. இஸ்ரவேலர் அதன் வழியே நடந்து எகிப்திலிருந்து தப்பியிருந்தார்கள். அவ்வாறு பிரிந்திருந்த செங்கடலின் நடுவே இஸ்ரவேலரைப் பின்தொடர்ந்து வந்த எகிப்திய சேனைகளைச் செங்கடல் முற்றிலுமாக மூடிப் போட்டிருந்தது.

தேவன் ஒருமுறை மோசேயிடம் மலையிடம் பேசு; அதிலிருந்து தண்ணீர் புறப்பட்டு வரும்; அதை ஜனங்களுக்குக் குடிக்கக்கொடு என்று சொல்லியிருந்தார். ஆனால், மோசே அப்படிச் செய்யாமல் மலையிடம் பேசுவதற்குப் பதிலாக தனது கோலால் மலையை அடித்துவிட்டார்; தண்ணீர் வந்தது. கூடவே



## மனன வசனம்

**கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர். வெளிப்படுத்தல் 4:11.**

மோசேக்கு ஒரு தண்டனையும் சேர்ந்தே வந்தது. தேவனின் வார்த்தையை மோசே மீறி விட்டதால், கானான் தேசத்திற்குள் மோசே போகமுடியாதென தேவன் சொல்லியிருந்தார். எனவே, மோசே இஸ்ரவேலரிடம் விடைபெற்றுவிட்டு தேவனைச் சந்திக்கப் போக வேண்டியிருந்தது.

மோசேக்கு அந்தப் புதியக் கானானுக்குள் செல்ல மிகவும் ஆசையாயிருந்தது; எனவே தேவனிடம், மோசே தானும் கானானுக்குள் செல்லவேண்டும் எனக் கெஞ்சினார். ஆனால் தேவனோ, ''இதைக் குறித்து நீ என்னிடம் இனிப் பேசக்கூடாது'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். உபா 3:24 - 26.

தேவனுடைய விருப்பத்தை மோசே ஏற்றுக்கொண்டார்; அடம் பிடிக்கவில்லை. தேவன் இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவர். அதனால், அப்படியே மோசேயை விட்டுவிடவில்லை. ''பிஸ்கா மலையின் உச்சியில் நீ நீல்; நான் உனக்கு இஸ்ரவேலர் சுதந்தரிக்கப் போகிற அருமையான கானான் தேசத்தைக் காண்பிப்பேன்'' என்றார் தேவன்.

இஸ்ரவேலரின் கூடாரங்களை மோசே ஏக்கத்துடன் பார்த்தார். தேவன் இஸ்ரவேலரை மிகவும் நேசித்தார். ஆனால் அவர்களோ வணங்காக் கழுத்துள்ள ஜனங்களாயிருந்தார்கள். மோசேயும் இஸ்ரவேலரை மிகவும் நேசித்தார்.

தேவனது மேலான செயல்களையும், திட்டங்களையும், இஸ்ரவேலரை தேவன் வழிநடத்திவந்ததையும் இன்னும் தேவன் தம்மிடத்தில் சொன்னவைகளையும் பத்துக் கற்பனைகளையும், தான் இஸ்ரவேலருக்குச் சொல்ல வேண்டிய உபதேசங்களையும்



## செய்தி

**தேவனே நாம் தொழுவதற்குப் பாத்திரமானவர்.**

எழுதி வைக்க வேண்டியிருந்தது. அப்படி மோசே எழுதிய உபாகமம் புத்தகம்தான் வேதாகமத்தில் ஐந்தாவது புத்தகம். ஆம், அந்தப் புத்தகம்தான் உபாகமம் என்று அழைக்கப்படுகிறது.

இஸ்ரவேலருக்கு தேவன் ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கிற நல்ல வீடுகளையும், பழத்தோட்டங்களையும், நல்ல கிணறுகளையும்அவர்கள் வாழ்விற்குத் தேவையான யாவையுமே கானான் தேசத்திலே ஆயத்தம் பண்ணிவைத்திருந்தார். எப்போதும் தேவனையே மனதில் நினைத்துக் கொண்டு இருக்கவேண்டும்; முழுமனதோடு தேவனிடம் அன்பாக இருக்கவேண்டும் என்றும் மோசே சொன்னார்.

என் செல்லமே! நாம் தேவனை முழுமனதோடு உண்மையாய் நேசிப்போமா?

**புதிர் 10**

**செய்முறை:**

*பாடத்தை நன்கு படித்து, கீழ்க்காணும் கேள்விகளுக்கு விடையளி.*

1. மோசேயின்மூலம் தேவன் ____________ செய்தார்.
2. தேவன் இரக்கத்தில் ____________உள்ளவர்.
3. மலையிடம் பேசுவதற்குப் பதிலாக அதை ____________ தேவனுக்குக் கீழ்ப்படிய மோசே தவறினார்.
4. ____________புத்தகம்தான் வேதாகமத்தில் ஐந்தாவது புத்தகம்.
5. முழுமனதோடு தேவனிடத்தில் ____________ இருக்கவேண்டும்.